## மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## பயிற்சிப் பரீட்சை-

**தரம் 13 (2020)** **பொருளியல்- 21-T-11** **மூன்று மணித்தியாலம்**

**மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

❖ **வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்**

❖ **உப பகுதி 'அ', உபபகுதி ' ஆ' ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**

### உப பகுதி (அ)

**இப்பகுதியில் இருந்து குறைந்த பட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்க.**

1. அ. அமையச்செலவு என்பதனை விளக்குக. (4 புள்ளிகள்)

   ஆ. சந்தைப் பொருளாதாரத்தில் விலைகளின் தொழிற்பாட்டை விளக்குக. (4 புள்ளிகள்)

   இ. கட்டளை முறையின் தோல்விக்கான காரணங்களை இனங்காண்க. (4 புள்ளிகள்)

   ஈ. நடைமுறைக்குப் பொருத்தமான உற்பத்தி சாத்திய வளையியின் வடிவம் யாது? அவ்வளையியில் விளக்கப்படும் அமையச் செலவு வகை யாது? அதற்கான காரணங்கள் எவை? (4 புள்ளிகள்)

   உ. பின்வருவனவற்றை உற்பத்தி சாத்திய வளையியின் மூலம் காட்டுக.
      I. பொருளாதாரத்திற்கு வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கப்பெறல்.
      II. வேலையின்மை.
      III. பொருளாதார வளர்ச்சி.
      IV. அடையமுடியாத உற்பத்திச் சேர்க்கை. (4 புள்ளிகள்)

2. அ. தனிநபர் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை? (4 புள்ளிகள்)

   ஆ. சாதாரண பொருள், இழிவுப் பொருள், கிபன் பொருள் என்பவற்றை விளக்குக. (4 புள்ளிகள்)

   இ. பின்வருவன ஒவ்வொன்றும் எத்தகைய நெகிழ்ச்சி நிலைமைகளில் காணப்படும் எனக்கூறுக.
      I. பண்டமொன்றின் விலை அதிகரித்தபோது வழங்குனர் வருமானம் அதிகரித்தது.
      II. பண்டமொன்றின் விலை அதிகரித்தபோது வழங்குனர் வருமானம் மாற்றமின்றி இருந்தது.
      III. பண்டமொன்றின் விலை அதிகரித்தபோது வழங்குனர் வருமானம் பூச்சியமாக மாறியது.
      IV. பண்டமொன்றின் விலை அதிகரித்தபோது வழங்கல் தொகையில் எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை. (4 புள்ளிகள்)

ஈ. பின்வரும் கேள்வி நிரம்பல் சமன்பாடுகள் உமக்குத் தரப்படுகின்றது.

$Qd = 100 - 2p$ $Qs = 30 + 3p$

I. சமநிலை விலை, தொகை யாது. (2 புள்ளிகள்)

II. சமநிலையில் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி யாது. (2 புள்ளிகள்)

III. மேற்குறித்த கேள்விச் சமன்பாடு $Qd = 200 - 2p$ யாக மாற்றமடைகின்றது. இவ்வாறு மாற்றமடைவதற்குரிய காரணிகளைத் தருக. (4 புள்ளிகள்)

3. அ. பண்டமொன்றிற்கான கேள்வியானது அதிக நெகிழ்ச்சியுள்ளதாக காணப்படுவதற்கான காரணங்களைத் தருக. (4 புள்ளிகள்)

ஆ. குறைந்தபட்ச விலைக் கொள்கை காரணமாக சந்தையில் ஏற்படும் விளைவுகள் எவை? (4 புள்ளிகள்)

இ. பொருள் ஒன்றுக்கான கேள்வி நிரம்பல் சார்புகள் வருமாறு.

$Qd = 600 - 10p$ $Qs = 10p$

I. சமநிலை விலை, தொகை என்பவற்றைத் தருக. (2 புள்ளிகள்)

II. இப்பண்டத்திற்கு அரசு 50 ரூபாவை உத்தரவாத விலையாக விதித்தால் சந்தையில் தோன்றும் மிகை நிரம்பல் யாது? (2 புள்ளிகள்)

III. உத்தரவாத விலையில் அரசு மிகை நிரம்பலைக் கொள்வனவு செய்தால் நுகர்வோன் மிகை, உற்பத்தியாளன் மிகை யாது? (4 புள்ளிகள்)

IV. மிகை நிரம்பலின் கொள்வனவு காரணமாக ஏற்படும் சமூகநல இழப்பு யாது? (4 புள்ளிகள்)

4. அ. பொருளியல் இலாபம் உற்பத்திச் செலவிற்குள் உள்ளடங்குகிறதா. உமது விடையை விளக்குக. (4 புள்ளிகள்)

ஆ. குறுங்காலத்தில் ஒரு நிறுவனத்தின் வெளியீடு அதிகரிக்கும்போது சராசரி மொத்தச் செலவிற்கும் சராசரி மாறும் செலவிற்கும் இடையிலான வேறுபாட்டிற்கு யாது நடக்கும் என்பதை விளக்குக. (4 புள்ளிகள்)

இ. நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் சமநிலையின்போது வருமானம், செலவுகள் தொடர்பான தரவுகள் வருமாறு.

| | |
|---|---|
| எல்லை வருமானம். | 100 |
| எல்லைச் செலவு. | 100 |
| ஆகக்குறைந்த சராசரிச் செலவு. | 160 |
| ஆகக்குறைந்த சராசரி மாறும் செலவு. | 110 |

இந்நிறுவனம் எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பாக என்ன ஆலோசனை கூறுவீர்? (4 புள்ளிகள்)

ஈ. தனியுரிமைப் போட்டி நிறுவனமொன்றின் முக்கியமான இயல்புகள் எவை? (4 புள்ளிகள்)

உ. சிக்கன வாடகை என்பதனால் கருதப்படுவது யாது? எச் சந்தர்ப்பத்தில் ஆக்கக் காரணி ஒன்று தனது உழைப்பு முழுவதையும் சிக்கன வாடகையாக பெற்றுக்கொள்ளும்? (4 புள்ளிகள்)

5. அ. பொரளாதாரப் பின்னடைவு பொருளாதார மந்தம் ஆகியவற்றை வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

ஆ. உற்பத்தி எல்லையில் உள்ளடக்கப்படும் விடயங்கள் எவை? (4 புள்ளிகள்)

இ. தன்னிச்சையான நுகர்வையும் தூண்டப்பட்ட நுகர்வையும் வேறுபடுத்துக. (2 புள்ளிகள்)

ஈ. பின்வரும் தரவுகள் பொருளாதாரமொன்றின் தேசிய கணக்கு சம்பந்தமானதாகும்.

| | |
|---|---|
| இறுதி நுகர்வுச் செலவு. | 700 |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம். | 1000 |
| இருப்பு மாற்றம். | 200 |
| சந்தைவிலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 1500 |
| ஏற்றுமதி | 150 |
| தேறிய வெளிநாட்டு முதன்மை வருமானம். | 250 |

1. இறக்குமதிகளின் பெறுமதி யாது? (2 புள்ளிகள்)
2. மொத்த உள்நாட்டு செலவு யாது? (2 புள்ளிகள்)
3. மொத்த தேசிய உற்பத்தி யாது? (1 புள்ளி)

உ. பொருளாதாரமொன்றின் செலவுப் பெருக்கியின் பெறுமதி 4 ஆகும். இப் பொருளாதாரத்தில் அரசின் செலவு 500ஆல் அதிகரித்தது. கீழ்வருவனவற்றுக்கு விடை தருக.

1. எல்லை நுகர்வு நாட்டத்தின் பெறுமதி யாது? (2 புள்ளிகள்)
2. செலவு அதிகரிப்பால் தேசிய வருமானம் எவ்வளவால் அதிகரிக்கும்? (1 புள்ளி)
3. அதிகரித்த வருமானத்தில் நுகர்வுக்கு எவ்வளவு செலவிடப்படும்? (2 புள்ளிகள்)

## உப பகுதி ஆ.

6. அ. பணத்தின் தொழிற்பாடுகளை இனங்காண்க. (2 புள்ளிகள்)

ஆ. உயர்வலுப்பணம் என்றால் என்ன? அதன் உள்ளடக்கங்கள் எவை? (4 புள்ளிகள்)

இ. பொருளாதாரமொன்றின் பணநிரம்பலை தீர்மானிக்கும் காரணிகள் எவை. (4 புள்ளிகள்)

ஈ. கேள்வித்தூண்டல் பணவீக்கம், செலவுத் தூண்டல் பணவீக்கம் என்பவற்றை வேறுபடுத்தி அவை ஒவ்வொன்றுக்குமான இரண்டு காரணிகளைத் தருக. (4 புள்ளிகள்)

உ. பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்படுகின்றன.

| | |
|---|---|
| பொதுமக்களிடமுள்ள நாணயம். | 800 |
| வணிக வங்கிகளிடமுள்ள நாணயம் | 200 |
| வணிக வங்கிகளிலுள்ள பொதுமக்களின் கேள்வி வைப்புக்கள். | 1800 |
| வணிக வங்கிகளிலுள்ள பொதுமக்களின் சேமிப்பு தவணை வைப்புக்கள். | 1500 |
| மத்திய வங்கியிலுள்ள வணிக வங்கியின் வைப்புக்கள் | 100 |

மேற்கூறிய தரவுகளைக் கொண்டு பின்வருவனவற்றுக்கு விடை தருக.

1. நாணயத்தளத்தின் பெறுமதி யாது? (2 புள்ளிகள்)
2. பணப்பெருக்கியின் பெறுமதி யாது? (M1) (2 புள்ளிகள்)
3. விரிந்த பணநிரம்பலின் பெறுமதி யாது? (M2) (2 புள்ளிகள்)

7. அ. மத்திய வங்கியின் முதன்மைத் தொழிற்பாடுகளைத் தருக. (4 புள்ளிகள்)

ஆ. பணக்கொள்கை என்றால் என்ன? பணக்கொள்கைக் கருவிகளின் பிரிவுகளைத் தருக. (4 பள்ளிகள்)

இ. மத்திய வங்கியின் துணைதீர் வைப்பு வசதி , துணைதீர் கடன் வசதி என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுக. (6 பள்ளிகள்)

ஈ. மூலதனச் சந்தையில் காணப்படும் உபசந்தைகள் எவை? அவற்றை விளக்குக. (6 பள்ளிகள்)

8. அ. வணிக வங்கியின் முதனிலை ஒதுக்குகளை தருக. (4 புள்ளிகள்)

ஆ. வணிகவங்கிகளின் வைப்பாக்கத்தினை விளக்கி அதற்கான எடுகோள்களைத் தருக. (4 புள்ளிகள்)

இ. குறித்த ஒரு பொருளாதாரத்தில் பணநிரம்பல் 7500 பில்லியன்களாகும். வங்கித்துறை
கட்டமைப்பிலுள்ள மொத்தக் கேள்வி வைப்புக்கள் 5000 பில்லியன்களாகும்.
வங்கித்துறையின் ஐந்தொகை வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| கேள்வி வைப்புக்கள் | 5000 | காசு ஒதுக்கம் | 500 |
| | | கடன்கள் | 4500 |
| | 5000 | | 5000 |

1. இங்கு மிகை ஒதுக்காக 250 பில்லியன் காணப்படுகிறது எனில் காசொதுக்கு வீதம் யாது? (2 புள்ளிகள்)

2. வைப்பாக்கப் பெருக்கியின் பெறுமதி யாது? (2 புள்ளிகள்)

3. வங்கி முறைமை மிகை ஒதுக்கு முழுவதையும் கடனாக வழங்கினால் உருவாகக்கூடிய மேலதிக வைப்புக்களின் அளவு யாது? (2 புள்ளிகள்)

4. தற்போதய நாட்டின் பணநிரம்பலின் அளவு யாது.? (2 புள்ளிகள்)

5. கடனாக்கச் செயற்பாடு நிறைவடைந்ததன் பின்னருள்ள வங்கிமுறைமையின் ஐந்தொகையினைத் தருக. (2 புள்ளிகள்)

6. குறிப்பிட்ட நியதி ஒதுக்க வீதத்தில் வணிக வங்கிகளால் உருவாக்கக்கூடிய கடனாக்கத்தைக் காட்டிலும் குறைவான கடனாக்கம் ஏற்படுத்துவதற்கான காரணங்களை இனங்காண்க. (2 புள்ளிகள்)

9. அ. சந்தைத் தோல்வி என்றால் என்ன என்பதை விளக்கி சந்தைத் தோல்விக்கான காரணங்களைத் தருக. (4 புள்ளிகள்)

ஆ. உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவு என்பதை இரண்டு உதாரணங்களுடன் விளக்குக. (4 புள்ளிகள்)

இ. ஒரு தாராள சந்தையானது ஏன் உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளைக் கொண்ட பொருட்களை அளவுக்கதிகமாக உற்பத்தி செய்கின்றது. பொருத்தமான வரைபடம் ஒன்றைப் பயன்படுத்தி உமது விடையினை விளக்குக. (4 புள்ளிகள்)

ஈ. அரசாங்க தோல்வி என்பதனை விளக்குக. அதற்கான காரணங்கள் எவை? (4 புள்ளிகள்)

உ. வெளிவாரி விளைவுகளின் விளைவாக ஏற்படும் சந்தைத் தோல்வியை சீராக்குவதற்கு அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை யாது? (4 புள்ளிகள்)

10. அ. வரி அறவிடுதலின் தத்துவங்களைத் தருக. (4 புள்ளிகள்)

ஆ. வரிவிதித்தலின் பொருளாதார பாதிப்புக்களைத் தருக. (4 புள்ளிகள்)

இ. அரச செலவில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதை ஆராய்க. (4 புள்ளிகள்)

ஈ. முழு மொத்த மீதி மற்றும் முதனிலைக் கணக்கு மீதி என்பவற்றை விளக்குக. (4 புள்ளிகள்)

உ. இலங்கை அரசின் வரவு செலவுத் திட்டத்தில் நடப்புச் செலவு தொடர்பான பிரதான இயல்பு தொடர்பாக கருத்துரை வழங்குக. (4 புள்ளிகள்)